## அத்தியாயம் 10

# நாடகப் பாடல்கள்

எமது முன்னோரிடையே சில நாடகங்களும் வழக்கிலிருந்துள்ளன. எனினும் ஏனைய இலக்கியத்துறைகள் வளர்ச்சியுற்ற அளவு இவை விருத்தியடையவில்லை. சமய ரீதியில், நடித்தல் என்பது தவிர்க்கப்பட்டமையும் வேடமணிதல் மற்றும் ஆடல்பாடல் விரும்பப் படாமையும், பெண்கள் பங்குபற்றுதல் முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளமையும், இதற்கான காரணங்களாக இருப்பினும், இஸ்லாமிய வரலாற்று நாடகங்கள் சில வழக்கிலிருந்துள்ளன. அவை அவ்வப்போது மேடையேற்றப்பட்டுமுள்ளன. அதனைவிடப் பாடல்களாக அவை அரங்குகளில் பாடப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகமாயுள்ளன. அத்துடன் பக்கீர் பாவாக்கள் றப்பான் இசையோடு இவற்றைப் பாடுகின்றனர். அடுத்து, பொல்லடிக் குழுவினர் தமது பொல்லடித் தாளத்துக்கேற்ப இசையமைத்துப் பாடி வருகின்றனர்.

அக்கால மேடைநிகழ்ச்சிகள் இரவு பத்து மணியளவில் ஆரம்பித்து சுபஹு நேரம் வரை நடைபெறும். பார்வையாளர்கள் பாய், தலையணை, வெற்றிலை வட்டா, வறுத்த கடலை, கச்சான்கொட்டை, சோளப்பொரி என்பவற்றோடு சென்று அங்கு பரப்பப்பட்டுள்ள வெண்மணற் பரப்பில் ஆற அமர அமர்ந்து நிகழ்ச்சியை ரசிப்பர். இடையிடையே நித்திரையும் கொள்வர். எழும்பியதும் பக்கத்திலுள்ளவரிடம் நடந்து முடிந்த கட்டங்களைக் கேட்டு அறிந்து கொள்வர்.

அலிபாதுஷா நாடகம், தையார் சுல்தான் நாடகம், அப்பாசு நாடகம், லால் கௌஹர் நாடகம், அலாவுதீன் நாடகம், சாந்தரூபி நாடகம்,

கபுகாபு நாடகம், பப்பரத்தி நாடகம், நொண்டி நாடகம் என்பன இவ்வாறு நடிக்கப்பட்டும் பாடப்பட்டும் வந்துள்ளன. இந் நூற்களின் பிரதிகள் காலக்கிரமத்தில் கிடைத்தற்கு அரிதாகிவிடுமெனப்பதால், சனரஞ்சகமாயிருந்த நாடகங்கள் சிலவற்றைப் பற்றிய குறிப்புக்கள் (சிறிது நீளமாயிருந்தாலும்) இங்கே தரப்படுகின்றன.

## i. அலிபாதுஷா நாடகம்

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மீசல் எனும் ஊரில் வாழ்ந்த வண்ணக் களஞ்சியப் புலவரால் அலிபாதுஷா நாடகம் இயற்றப்பட்டது. முஹம்மது இப்றாஹீம் எனும் இயற்பெயருடைய இவரது ஏனைய நூல்கள் இராஜநாயகம், குத்பு நாயகம், தீன் விளக்கம், சீறா விளக்கம் என்பவையாகும்.

1820 ஆம் ஆண்டில் வண்ணக்களஞ்சியப் புலவரால் இயற்றப்பட்ட இந்நாடகம், 1870இல் பதிப்பிக்கப்பட்டு நூலுருவில் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1880இலும், மூன்றாம் பதிப்பு 1929இலும், நான்காம் பதிப்பு 1941இலும், கடைசியாக ஐந்தாம் பதிப்பு 1990இலும் வெளிவந்துள்ளன. 1929 இல் இதனைப் பதிப்பித்தவர் கொழும்பைச் சேர்ந்த பி. மொஹிதீன் பிச்சை என்பவராவார். கடைசிப் பதிப்பு பேராசிரியர் டாக்டர் சேமுமு. முஹம்மதலி அவர்களினால் செய்யப்பட்டுள்ளது. இப்பதிப்பில் அருமையானவொரு நீண்ட முன்னுரையையும் அவர் எழுதியுள்ளார். சேமுமு. முஹம்மதலி அவர்கள்தான் 1999இல் சென்னையில் நடைபெற்ற ஆறாவது உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாட்டை முன்னின்று நடத்தியவராவார்.

இந்நாடகத்திற் கதாபாத்திரங்கள் மொத்தம் 28 பேராவர். அதில் முக்கியமானோர் ஷாம் தேசத்து மன்னன் அலிபாதுஷா, அவரது மனைவி சபுரியத்து, அவர்களது மக்களான அபுசனா, சம்சுதீன், கமருதீன் மற்றும் ஈராக் தேசத்து அரசன் சுல்மான் என்போராவர்.

ஷாம் தேசத்து மன்னன் அலிபாதுஷாவின் மூத்த மகன் அபுசனா துர்நடத்தைகள் நிரம்பப் பெற்றவன்.

"கொடிய மாய இபுலிசிட குணத்துக்கடுத்த கொடியவனாய்
அடங்காப் பாவப் பழிகள் செய்திடும் அபுசனா"

என விபரிக்கப்படுகிறான். அவனது துன்புறுத்தலையும் வன்முறைகளையும் பொறுக்க மாட்டாத குடிமக்கள், மன்னனிடம் முறையிட்டு, அத்தகைய கெட்ட மகனைப் பெற்ற தகப்பன் முடிதுறந்து நாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதனைப் புலவர் பின்வருமாறு கூறுகிறார்:

அபுசனாவை நாங்கள் எதுவும் செய்யமுடியாது. அவனுக்கு மரணதண்டனை விதியுங்கள் எனக் குடிமக்கள் மன்னனை வேண்டுகின்றனர்.

குடிமக்கள் : இப்பால் குடிகள் கொலை செய்யவொண்ணாது
அப்பால் நீர் செய்யும் அலிபாதுஷாவே.

பாதுஷா : அரசரென்றென்னைச் சொல்ல அவனைக் கொல்ல
வருமோ மருகாக தனக்கு மனந்துணியாதே.

குடிமக்கள் : துணியாதென்றாலந்த துஷ்டனுநீரும் மணியாசனம்
விட்டு மறுதேசம் போகும்.

இதனையேற்றுக் கொண்ட மன்னன், மனைவியுடனும் இளைய குமாரர்களான சம்சுதீன், கமருதீன் ஆகியோருடனும் நாட்டைவிட்டு வெளியேறிக் காட்டுவழி செல்கையிலே கள்வர்கள் அவர்களது அனைத்துப் பொருட்களையும் கொள்ளையடித்து விடுகின்றனர். வெறுங்கையுடன் ஈராக் தேசத்தையடைந்த இவர்கள் பள்ளிவாசலொன்றிற் தங்கியிருந்த பொழுது சபுரியத்தும் பிள்ளைகளும் அங்குள்ள சத்திரமொன்றிற்குச் சென்று உணவு கேட்டனர். பேரழகியான சபுரியத்தைக் கண்ட அச்சத்திரக் கணக்கன், அத்தேசத்து மன்னனான சுல்மானிடம் அவளைப் பற்றிக் கூறுகிறான். அடுத்த நாள் இரப்பதற்கு வந்த சபுரியத்து கைப்பற்றப்பட்டு சுல்மானிடம் ஒப்படைக்கப்படுகிறாள். தமக்கு உயிராபத்து வருமென அஞ்சி அலிபாதுஷாவும் பிள்ளைகள் சம்சுதீனும் கமர்தீனும் அந்நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

சபுரியத்து அழகு, ஒழுக்கம், நிறைகுணம் என்பன வாய்க்கப் பெற்றவள். அவளைப் பற்றிப் புலவர் பின்வருமாறு வர்ணிக்கிறார்:

தங்க நற்பணிகள் பூண்டு சதுரமுக்காடுமிட்டு
அங்கமுந் தெரிந்திடாமல் அரிவையர் கற்பு மாறா
மங்கள மிகச் செழிக்க மாமனை தன்னைவிட்டுச்
சங்கையும் வெற்றி பெற்ற சபுரித்தியம்மாள் வந்தாளே.

சுல்மானிடம் அகப்பட்ட சபுரியத்து தனது புத்திசாதுரியத்தினால், அவனது இச்சைக்கு உட்படாது வாழ்ந்து வருகிறாள். காலப்போக்கில் அவள் இட்ட சாபத்தினால் சுல்மான் குஷ்டரோகியாகிறான்.

ஈராக்கை விட்டுத் தப்பிச் சென்ற அலிபாதுஷா வழியில் தம் மக்களை இழக்கிறார்; அவரும் உயிர் இழக்கிறார். ஆனால் ஈஸா நபியினால் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு அந்நபியினது சிபார்சினால் மிஸ்ர் தேச மன்னனாகிறார்.

சிறிது காலத்தின் பின் தம் தந்தைதான் மிஸ்ர் அரசன் எனவறியாது அபுசனா அரண்மனையில் வேலைக்குச் சேர்கிறான். இளைய குமாரர்களும் அவ்வாறே அங்கு வந்து தொழில் புரிகிறார்கள்.

மிஸ்ர் மன்னன் குஷ்ட நோய் தீர்க்கும் வல்லமை பொருந்தியவர் எனக் கேள்விப்பட்டு சுல்மான் அங்கு வருகிறான். சபுரியத்தையும் உடன் கொண்டு வருகிறான். அவனது நோய் குணமடைகிறது.

இதே வேளையில் அலிபாதுஷாவும் மனைவியும் மக்களும் பல்வேறு சம்பவங்கள் மூலம் ஒருவரையொருவர் அறிந்து ஒன்று சேர்கின்றனர். சுல்மானும் நோய் தீர்ந்து புத்தியும் தெளிந்து தன் நாடு செல்கின்றான்.

இவற்றினைக் கேள்வியுற்ற ஷாம் தேசத்து மக்கள், மிஸ்ருக்கு வந்து அலிபாதுஷாவை அழைத்துச் செல்கின்றனர். தற்போது நல்லவனாக மாறிவிட்ட அபுசனாவுக்கு விவாகமும் முடித்து, அந்நாட்டு அரசனாக முடியும் சூட்டப்படுகிறான். அலிபாதுஷா மனைவியுடனும் சம்சுதீன், கமருதீனுடனும் மிஸ்ருக்கு வந்து தொடர்ந்து மிஸ்ரின் அரசனாக நல்லாட்சி செலுத்தினார். இதுதான் கதை. துன்பியலாக ஆரம்பித்து இன்பியலாகக் கதை முடிகிறது.

விருத்தம், தரு, வசனம் என்பவற்றினால் இயற்றப்பட்ட 150க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்நாடகம் படிக்கப்பட்டும் இசைக்கப்பட்டும் நடிக்கப்பட்டும் வந்துள்ளது. மதுரை ஒரிஜினல் பாய்ஸ்

கம்பனி, இந்து வினோத நாடக சபா, பாலமனோகர சபா, சீனிவாசப்பிள்ளை நாடகக்குழு என்பன இதனை நாடகமாகக் காலத்துக்குக் காலம் மேடையேற்றியுள்ளன.

நாடகத்தைக் கேட்கும் அல்லது பார்க்கும் எல்லோருக்கும் பாடல்கள் அனைத்தும் தெளிவாக விளங்கும் என எதிர்பார்க்கமுடியாது. அதனால் இடையிடையே வசன நடையிற் கதைச்சுருக்கமும் நடைபெறும் சம்பவங்களும் கூறப்படுகின்றன.

உதாரணங்கள்: "அகோ கேளும் மந்திரிமார்களே! சூரியப் பிரகாசம் பொருந்திய மாணிக்க முதலாகியவைகள் பதித்திருக்கிற நம்முடைய நவரத்ன சிம்மாசனத்தில் வந்திருக்கிறேன் என்று பெரிய மகனாகிய அபுசனாவை இச் சமூகத்தில் வரச் சீக்கிரமாய் அழைப்பியும் பிள்ளாய்".

"அகோ கேளும் பாதுஷாவே! சகல லோகத்தவராலும் துதிக்கப்பட்ட கிரீடாதிபதியாய் வெற்றி மாலையைத் தரித்த ஜகபதியான பாதுஷாவே! நாங்கள் ஒரு விண்ணப்பம் சொல்கிறோம். அதை எங்கள் பெயரில் கிருபாகடாட்சம் வைத்து நாங்கள் சௌக்கியம் பெறத்தக்கதாகக் கிருபை செய்யவேணும் பாதுஷாவே!"

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இந்நாடகம் அறியப்பட்டதாயிருந்து, இசைக்கப்பட்டும் சிலவேளைகளில் நடிக்கப்பட்டுமுள்ளது.

இதனை மேடையேற்றுதல் இருமுறையாக நடைபெற்றுள்ளது. ஒவ்வோர் இரவிலும் பகுதி பகுதியாகச் சுமார் ஒருவார காலத்துக்குத் தொடர் நாடகமாக நடிக்கப்பட்டிருக்கிறது. அல்லது நாடகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுத்து மேடையேற்றியுள்ளனர். எனினும் மேடையேற்றப்பட்டதை விட நடிப்பில்லாது இசைக்கப்பட்டதே முஸ்லிம்களுடைய வழக்காயிருந்துள்ளது.

இந்நாடகத்தை மேடையேற்றுவதில் எதிர்கொள்ளப்பட்ட பெரியதொரு சிக்கல் சுல்மான் பாத்திரத்துக்கு நடிகரொருவரைத் தேடிப்பிடிப்பதாகும். சுல்மான் அரசனைச் சபுரியத்து சபிக்கும் பாடல்கள் சில வருகின்றன. அவை மிகக் கொடிய சாபங்களாகும். அவற்றை எதிர் கொள்ள நடிகர்கள் பயந்தனர். தாம் அச்சாபத்துக்கு உட்பட்டு விடுவோமோ என அவர்கள் எண்ணினர்.

அப்பாடல்களில் சில வருமாறு:

வலுச்செய்வேனென்று சொல்லிவருகிறானே இந்த சுல்மான்
கொலுவழிந்துபோகானோதான் கொற்றவனே காக்கவேணும்
இத்தனைநாள் காத்தவனே இன்றைக்கு நீ காக்கவேணும்
பத்தினியாள் கற்புக்கொரு பழுதுவராது காக்கவேணும்
உன்னிடத்தில் பாரஞ்சாட்டி நானொருமையாய் காக்கவேணும்
பின்னமொன்று வராமலே இறைவனே காக்கவேணும்
பொட்டெனப் படுவானுக்கு பிழைமோசம் வந்திடாதோ
குட்டம்வரச் சுல்மானுக்கு கொடுத்திடாயோ மன்னவனே
கைகால்கள் நடுங்கிப்போகக் காட்டிடுவாய் சுல்மானுக்கு
வலுச்செய்வேனென்றுசொன்ன வாயழுகச்செய்வாயல்லோ
சலித்தழுக சுல்மானுக்கு சஞ்சலம் விடுவாயல்லோ
பாவிநானிரங்குதுவா படைத்தவனே கிருபைசெய்வாய்
ஆவிகுன்றிக்கேட்குந்துவா ஆண்டவனே கபூல் செய்வாய்.

வல்லமைவார்த்தைசொல்லி வந்த கொடிய சுல்மானுக்கு
சொல்லயில்லாமற்போகத் துய்யவனே செய்யவேணும்
துஷ்டத்தனஞ்செய்தபாவி தொன்னகரழியக்
கட்டியணைவேனென்றோடிய காலசைந்து போகவேணும்
காரிகைபத்தினியானால் கையசந்துபோகவேணும்
கோரியென்சொற்படிக்குக் குட்டம் வந்துபிடிக்கவேணும்
கர்த்தனேயென்பழியா காவலனே காக்கவேணும்
அன்னைதந்தையில்லாதானே ஆண்டவனே காக்கவேணும்
என்னையாளும் றகுமானே யிறைவனே காக்கவேணும்.

இறைவன் மேல் அசைவில்லாப் பற்றுக் கொள்வதே கதையின் அடிநாதமாகும். அத்துடன் கற்பின் சிறப்பு, பிறர்மனை நாடாப் பெருங்குணம் என்பனவும் முக்கிய இடம்பெறுகின்றன. ஆறு கிளைக்கதைகளைக் கொண்ட இந்நாடகத்தில் நூஹு, மூசா, ஈசா, யாகூப், இப்றாஹீம், இஸ்மாயில் ஆகிய நபிமார்களின் வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன.

## ii. தையார் சுல்தான் நாடகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முஸ்லிம்களின் மற்றுமொரு நாடகம் தையார் சுல்தான் என்பதாகும். எமக்குத் தற்போது கிடைக்கப்பெறும் 1881ஆம் ஆண்டையப் பதிப்பில் 'இரண்டாம் பதிப்பு' எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இதன் முதற் பதிப்பு அதற்குப் பல வருடங்களுக்கு முன்பதாக வெளிவந்திருத்தல் வேண்டும்.

இந்நூலின் முகப்புப் பக்கத்தில் பின்வருமாறு அச்சிடப்பட்டுள்ளது: "இது நம்பு தாழை சின்னவாப்பு என்பவர் பாடியிருந்ததில் கதை பொருந்தாமலும், இராகதாளம் வசனங்களில்லாமலுமிருந்ததை இராமநாதபுரம் இரவுண் ஷாப்புக்கடை ப.வெ. முகம்மது இபுறாஹீம் சாகிபு அவர்களால் நூதனமாகப் பாடிச் சேர்த்தும், இராகதாள வசனங்களமைத்தும் நாடக அலங்காரமாய்ச் செய்ததை வீரணந்தோட்டம் கோவிந்த நாயகரவர்களால் பார்வையிடப்பட்டு, கொண்ணூர் மாணிக்க முதலியார் கம்பெனியானவர்களால் தமது மனோன்மணி விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது".

பண்டைய நூல்களின் சிறப்பம்சங்களிலொன்று அந்நூலின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் வரும் பாடலொன்றில் ஆக்கியோன், கதைப்பொருள், அச்சிட்டோன், பொருளுதவி புரிந்தோன், வெளியிட்ட ஆண்டு போன்ற விபரங்கள் அனைத்தும் கூறப்பட்டிருத்தலாகும். பிற்காலத்தில் இந்நூலினைப்பற்றிய ஆய்விலீடுபடுவோருக்கு இத்தகவல்கள் மிகவும் பிரயோசனப்படுகின்றன.

உதாரணமாகத் தையார் சுல்தான் நாடக நூலின் கடைசிப் பாடல் இத்தகைய தகவல்களைக் கொண்டுள்ளது. அது வருமாறு:

ஆதியிறசூல் நாலியார்களுடன் வாழி
  அசுகாபிமார்களும் அசனுசைனும் வாழி
வேதவர்கள் மாதவர்கள் மெய்யோர்கள் வாழி
  வேந்தர் தையார் மரியம் சுலைகாவும் வாழி
நீதிசேர் கட்டு மாநகரந்தனில் வாழும்
  லெவ்வை சாயபு லெவ்வை நீதியுடன் வாழி
ஆதியினில் கதையை நாடகமாய்ச் சொன்ன

அருள்நம்பு தாழை சின்னவாப்பு மிகவாழி
கோகிலா ராமநாதபுரத்தில் வாழும்
குணமுக ப. வெ. முகம்மதிபுறாஹீம் வாழி
ஏதமிலா யேனங்குடி கரைபாகம் வாழும்
இ. ஷே. கு. இபுறாஹீம் இனத்தோரும் வாழி
காதலுடன் னூலை யச்சதனிலிட்டக்
கனவான்கள் மாணிக்க முதலி கம்பேனி வாழி
சோதி நெல்வேலி ஆதம்ராவுத்தர் வாழி
தொல்லுலகோர் வாசிப்போர் கேட்போர் வாழியவே.

அக்கால நூல்களின் பிறிதோர் அம்சம் எப்போதும் இறைவாழ்த்தோடு ஆரம்பிப்பதாகும். இந்நூலும் அப்பண்பைத் தவறவிடாது பின்பற்றுகிறது. இறைவாழ்த்துப் பின்வருமாறு அமைகிறது:

அல்ஹம்துலில்லாஹி அரிய பெரியோனே
சொல்லுகந்த முகம்மதர் துணையடியைப் பேணி
வில்லுகந்த சீனநகர் வேந்தர் நாடகம் பாட
வல்லசமதானவர்க் கருள வரந்தருவாய்.

சீதமுறை சோலைவளர் சீனநகர் மீதில்
சாதி மணிமுடிசூட்டும் தையாராசன் கதையை
நீதி தவறாத் தமிழ் நேர் நாடகம் பாட
சோதி முடிவில்லாத் துய்ய வாக்கருள்வாய்.

இவ்வித இறைகாப்போடு கதை ஆரம்பமாகிறது.

சீனா தேசத்தைத் தையார் சுல்தான் எனும் அரசன் நீதிநெறி தவறாது ஆண்டு கொண்டிருக்கிறார். அவர் அரச சபைக்கு வருவதைக் கட்டியகாரன் பின்வருமாறு விபரிக்கிறான்:

"அகோ வாருங்கள் சபையோர்களே! இராஜ மான்னிய ராஜபூஜித ராஜகெம்பீர ராஜவுத்தண்ட துஷ்டநிக்கிரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்கின்ற சீனமாநகராட்சி செலுத்தாநின்ற தையார் சுல்தானென்பவர் முதன் மந்திரியாகிய உமரென்னு மந்திரியுடன் கொலுவுக்கு வருகிறார். ஒருவரோடொருவர் பேசாமலிருங்கள் சபையோர்களே!"

தையார் சுல்தான் தனது அன்றாட ராஜ்ய அலுவல்கள் முடிந்தபின்னர் புனித குர்ஆனை ஓதுகிறார். அவ்வாறு ஓதும் பொழுது "கண் மூடி விழிக்கு முன்னே ஓர் அரசருடைய வாழ்வையழித்துவிடுவேன்; அதேவேளை ஒரு மிசுக்கீனை இராஜனாக்கி அநேக தவுலத்தையும் கொடுத்துவிடுவேன்" எனும் கருத்தப்படவுள்ள ஆயத்தை வாசித்தபொழுது ஒரேயொரு கணம் தன்னைப் பற்றிச் சிந்தித்தார். அவ்வாறு சிந்தித்தவுடனேயே சூழ்ந்திருந்த எவர்களுக்கும் தென்படாமல் அவர் மாயமாய் மறைந்துவிட்டார்.

அவ்வாறு மறைந்த அரசனை எங்கு தேடினும் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியாக எல்லோரது வேண்டுகோளின் பிரகாரம் அவரது மனைவி சுலைகா அரசாட்சியை ஏற்கிறார். இதனை அவளது தாதி பின்வருமாறு கூறுகிறாள்:

அன்னாளிலெழுதியவன் அழித்தெழுதப் போறதில்லை
என்னாளு மன்னவனை ஏகபரன் கூட்டிவைப்பான்
நன்னியே நீயிங்கிருந்து கலங்கிறதாலென்னபலன்
ஒன்றுமெண்ணாதிருந்தில் வுலகமதையாண்டிருப்பாய்.

காணாமற் போன தையார் சுல்தான், கண்விழித்தபோது அடர்ந்த காடொன்றினுள் இருந்தார். மிருகங்களைத் தவிர மனித சஞ்சாரமேயில்லை. அக்காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்ததினால் அவரது உருவமே மாறிவிட்டது. நாற்பது மாத அலைச்சலின் பின்னர் மிஸ்ர் தேசத்தையடைந்தார். ஒரு பள்ளிவாசலிற் தங்கி அப்பள்ளிவாசல் முஅத்தினுடன் நட்பானார். தனது தஸ்பீஹ் கோர்வையிலுள்ள மணியொன்றைக் கழற்றிக் கொடுத்து, அதனை விற்று உணவு வாங்கிவருமாறு முஅத்தினை வேண்டினார். அது மிகப் பெறுமதி வாய்ந்த நவரத்தினமாகும். கடைத்தெருவில் இதன் பெறுமதியை அறிந்தோர், தையார் சுல்தான் இதனை எங்கோ களவெடுத்திருக்க வேண்டுமெனக் கருதி அவரை மிஸ்ர்தேச மன்னனான ஹபீபரசன் முன் கொண்டு நிறுத்தினார். அவன் தீர விசாரியாது, தையார் சுல்தானின் மாறுகால் மாறுகை வெட்டி அவரைப் பாழுங்கிணற்றில் வீச உத்தரவிட்டான்.

அவ்வாறு வீசப்பட்ட தையார் சுல்தானை ஒரு வாலிபன் காப்பாற்றித் தன் வீட்டில் வைத்திருந்தான். நொண்டியான மன்னன் சதா திருக்குர்ஆனை அழகாக ஓதிக்கொண்டு அங்கு வசித்திருந்தார்.

ஓர் இரவு ஹபீபரசனின் நான்காவது மகளான மரியம் தனது பரிவாரத்துடன் அவ்வழியே போகும்பொழுது தையார் சுல்தானின் இனிமையான குர்ஆன் ஓதலினாற் கவரப்பட்டாள். மாளிகை திரும்பிய அவள் மோகத்திற் தவித்தபொழுது. பெற்றோர் அவளுக்கான விவாக ஏற்பாடுகளைச் செய்தனர். சகல தேசத்து இளவரசர்களும் அழைக்கப்பட்டனர். அவர்கள் குர்ஆனை ஓதுமாறு வேண்டப்பட்டதும், தான் முன்னர் கேட்ட இனிமை இவர்கள் எவரினதும் ஓதலில் இல்லாதிருப்பதை மரியம் உணர்ந்தாள். இதனைத் தொடர்ந்து அந்நகரத்திலுள்ள ஆண்கள் அனைவரும் அழைக்கப்பட்டுக் குர்ஆனை ஓதுமாறு பணிக்கப்பட்டனர். அவ்வேளையில் தையார் சுல்தானின் ஓதலைச் செவியுற்ற மர்யம் அவரையே மணமுடிக்க வேண்டுமெனக் கூறினாள். ஒரு நொண்டியையா தனது செல்வமகளுக்கு மணமகனாக்குவது எனப் பெற்றோர் மறுத்தாலும், ஈற்றில் விட்டுக் கொடுத்தனர். தையார் அரசன் மரியத்தைக் கல்யாணம் செய்தார்.

கல்யாண வைபவத்தைப் புலவர் வர்ணிக்கிறார். அவர்தம் காலத்துச் சம்பிரதாயங்களை மனதிற் கொண்டு கூறும் கல்யாண மரபுகள் பல இன்றுள்ள முறைகளோடு ஒத்திருப்பதைக் காணலாம்.

மன்னவனாங் கபீபுராஜன் மனமதுதான் மகிழ
நன்னயமதாக எல்லோரு நாடி மனமகிழ்வாய்
எண்டிசையோர் போற்றும் தையாரேந்தலரசருக்கும்
வண்டுறை மலர்சூடும் மரியமாது மின்னார்தனக்கும்
வந்த பெரியோரும் ஆலிம் மகிழ்வுள்ள லெப்பைகளும்
சிந்தை மகிழ்வாக மார்க்கப்படி சிறப்பா மணமுடித்தார்
நிக்காஹ் முடிந்த பின்பு நல்ல நெறியா பாத்திகாவோதி
அக்கனிடந்தனிலே எல்லோரும் அன்பாய்த் துவாக்கேட்டு
மன்னவன் தையாரரசை கபீபு மகளிருக்கு மறையில்
அந்நேரமேயழைத்துப் போய் அவளருகிலிருத்தி
கையதனைப் பிடித்து இருவரும் கனமுடன் வாழ்வீரென்று
தையலர்கள் வாழ்த்த மற்றுந் தாதியர்கள் போற்ற
வந்தவரசர்க்கும் அந்தமாநகருள்ளவர்க்கும்
சிந்தைகளிகூர்ந்து லெப்பையாலிம் சேர்ந்த அனைவருக்கும்
சிங்கன் கபீபரசன் ஒஜீவனஞ் சிறப்பாகவே கொடுத்து

துங்கத் தாம்பூலமுடன் வெகுமதி துரிதமாய்த்தான் கொடுத்தார்
வந்தவரெல்லோரும் அவரவர் வாழ்மனை போய்ச் சேர்ந்தார்.

திருமணத்தின் பின் தையார் சுல்தான் தனது பூர்வீக வரலாறு அனைத்தையும் மனைவிக்குக் கூறினார். அத்துடன் நல்லாட்சி நடத்திய தானும், கற்புக்கரசியான மரியமும் இணைந்து துஆக் கேட்டால் தனது கையும் காலும் வளருமெனக் கூறினார். அவ்வாறே தொடர்ந்து ஆண்டவனை வேண்டிக் கொண்டதனால் அவரது முடம் போய், பழைய நிலைக்குக் கையும் காலும் திரும்பின.

இக்காலகட்டத்தில் கபீரசனின் இராச்சியத்திற் புலியொன்று மிகவும் கொடூரமான முறையில் மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தது. அதனைக் கொல்லுமாறு தனது மூத்த மருமகன்கள் மூவரை அரசன் அனுப்பியுங்கூட, எதுவும் நடைபெறவில்லை. இறுதியாகத் தையார் சுல்தான் அப்புலியைக் கொல்கிறார்.

இவற்றையெல்லாம் அறிந்த கபீரசன், தனது இராச்சியத்தைத் தையார் சுல்தானுக்குக் கையளிக்க விரும்புகிறான். ஆனால் அவர் அதை ஏற்காது, தனது சகலப்பாடிகளுக்கு அவ்வரசிற் பாதியை மூன்றாகப் பிரித்துக் கொடுக்கிறார். தன்னைக் காப்பாற்றி வளர்த்த வணிகனை கபீரசனின் முதன் மந்திரியாக்குகிறார். அதன் பின்னர் மரியத்தையும் அழைத்துக் கொண்டு சீனநகர் திரும்புகிறார். சுலைகாவும் மிக மகிழ்ச்சியடைகிறார்.

மீண்டும் அரச பொறுப்பினையேற்று நீதிநெறிவழுவா ஆட்சி நடத்துகிறார்.

இன்பச் சுவையில் ஆரம்பித்து அவலச் சுவையூடே சென்று மீண்டும் சுபமாகக் கதை முடிகிறது.

தையார் சுல்தான் நாடகத்தில் இலங்கையைப் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. தையார் சுல்தானுக்கும் கபீரசன் மகளுக்குமிடையே நடைபெறும் கல்யாணத்தில் இலங்கை மன்னன் கலந்து கொள்கிறான். அதேபோன்று தையார் சுல்தானின் இரண்டாவது பட்டாபிஷேகத்தில் வங்கர், மராடர், கலிங்கர், கர்நாடகர், **சிங்களர்,** கொங்கணர் எங்குளபேர்களும் வந்து தையாரை வாழ்த்திச் சிந்தைகளித்துப் போற்றினர்.

## iii. அப்பாசு நாடகம்

இராமநாதபுரம் ரவுன் ஷாப்புக்கடை பா.வெ.முகம்மது இப்றாஹீம் சாஹிபு என்பவரால் இயற்றப்பட்ட இந்நாடகம் முதலில் எழுத்துப் பிரதியாயும், வாய்மொழியாயும் வழக்கிலிருந்து அதன் அச்சு மூலமான பதிப்பு 1884ஆம் ஆண்டு வெளிவந்தது. திருநெல்வேலிப் பேட்டை வங்காளம் முகம்மது ராவுத்தர் குமாரர் மகுதன ராவுத்தர் என்பார் இதனைப் பதிப்பித்தார். இரண்டாவது பதிப்புச் சென்னை திருவல்லிக்கேணி மொ. அ. சாகுல்ஹமீதுலெவ்வையினால் செய்யப்பட்டது. இதன் மறுபதிப்பு 1953இலும் வெளிவந்துள்ளது. நான்காவது முறையாக 1990இல் பேராசிரியர் கலாநிதி சேமுமு. முஹம்மதலி அவர்களின் பதிப்பு வெளிவந்துள்ளது. 1884இல் வெளிவந்த மூலநூலை அடியொற்றி இப்பதிப்பினை முஹம்மதலி செய்துள்ளார்.

மூலநூலுக்கும், 1926இல் வெளிவந்த சாகுல்ஹமீதுலெவ்வையின் பதிப்புக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அக்கால இலக்கியம் ஏட்டுப் பிரதிகளின் மூலமும் வாய்மொழியாகவும் வழங்கி வந்த காரணத்தினால், அதன் உள்ளடக்கம் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபடும் பண்புண்டு. இதற்கொப்ப தமக்குக் கிடைத்த பிரதியொன்றைக் கொண்டு அப்பாசு நாடகத்தைச் சாகுல்ஹமீதுலெவ்வை பதித்த காரணத்தினால் இவ்வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கலாம்.

மனிதர்கள் எவரும் தமக்குக் கிடைத்திருக்கும் பாக்கியங்களைக் கொண்டு பெருமை பாராட்டக் கூடாது. அவ்வாறு செய்வது சிறுமைக்கே வழிகோலும். அதன் மூலம் பல நஷ்டங்களும் கஷ்டங்களும் ஏற்படும். ஆயினும் அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு தனது தவறுகளை உணர்ந்து மனம் வருந்தி, பூரண இறைநம்பிக்கையோடு நடந்து கொண்டால் எல்லாப் பாவங்களும் நீங்கி வாழ்வில் உயர்வு வரும் என்பதுவே நாடகத்தின் கருப்பொருளாகும்.

இக்கதையின் சுருக்கத்தினை நூலாசிரியரே இதன் முதற் பதிப்பிற் பின்வருமாறு தந்துள்ளார்:

“நெடிய கடல் சூழ்ந்த பூலோகத்தின் கண் மஹா சிறப்புற்றோங்கிய தேசங்களிலொன்றாகிய அந்தமாநகரை அரசாட்சி செலுத்துகின்ற

இராஜமானிய ராஜபூஜித மஹாராஜஸ்ரீ அகமதுசாவென்னும் அரசனானவருக்கு எல்லாப்பாக்கியமும் நிறைந்து புத்திர பாக்கியமில்லாமல் மனமகிழ்ச்சியானது குறைந்து ஏழைமிசுக்கின் ஆதுவர்களுக்குக் ஹைறாத்தென்னும் முப்பத்திரண்டு தரும முதலாகிய சக்காத்துமீந்து பள்ளி முதலிய சாவடியுங்கட்டிக் குடிகளிடத்தில் ஆறிலொரு கடமைவாங்கித் தீனெறிசெலுத்தி நீதத்துடனே எல்லாருடைய மனதிற்குமோர் குறைவின்றித் தன்னுயிர்போல் மன்னுயிரையும் காத்து அரசு செலுத்தி வருகிற நாளையில்,

அல்லாகுசுபுகானுத்தஆலாவுடைய வுதவியால் ஒரு புத்திரன் பிறக்க இதற்கு அப்பாசு என்னும் பெயர் வைத்து வளர்ந்து சாமர்த்தியனாயிருக்கிற நாளையில் அகமதுசா என்பவரும் அவர் மனைவி மதியமாதும் தனது புத்திரனைப் பார்த்து நாயனைவென்று பெருமையடைந்திருக்கையில்,

பெருமையடைந்தவர் சிறுமையடைந்தார்களென்கிற பழமொழிபோல் ஆதிநாயகனுடைய விதிப்பயனால் அப்பாசென்பவர் காட்டிற் போய் வேட்டையாடப்போனவிடத்தில் அவருக்குத் தாகமேலிட்டுப் பிரலாபிக்கையில் காலாட்கள் சலந்தேடிப் போனவிடத்தில் ஒரு பானையிற் கள்ளிருந்தது. அதைத் தெரியாமல் தண்ணீரென்றரசனுக்குக் கொடுக்க அதைக் குடித்தவுடனே வெறிமீறினதால் அச்செய்தியை அகமதுசாவறிந்து ஒரு வைத்தியரால் வெறிநீங்கச் செய்திருக்க அந்நகரத்திலுள்ள சில பெரியோர் கூடி மார்க்கப்படி ஐந்து வருஷம் அந்நகரைவிட்டுக் காட்டிற்குப் போய் வரும்படியாகச் சொல்ல அதுபோல அகமதுசா அவர் மனைவி மதியமாதும் இவர்கள் புதல்வனப்பாசும் அந்நகரை விட்டுக் காட்டிற்குப் போகும்போது பொருள்கள் முதலான யாவற்றையும் கள்ளர்கள் பறித்துக்கொண்டு போகப் பின்பு பாலைவனங்களிற் போய் உணவு முதலிய ஆகாரங்களுக்கு வருத்தப்பட்டு நடக்கிறதற்கு முடியாமல் தந்தை தாயிருவரையும் அப்பாசு தோளிற்றூக்கிக்கொண்டு நடக்கையில் காலில் கல்லிடறி வீழ்ந்து மூர்ச்சையாகித் தெளிந்தெழுந்து மிகவும் வருந்தி நடக்கையில்;

சிந்து தேசத்தைக் கண்டு ஒரு நாள் பிச்சை எடுத்துண்டு மறுநாள் கூலி வேலைக்குப் போய் வேலையகப்படாமல் ஒரு திண்ணையில் அப்பாசு படுத்திருக்க அந்நகரத்தையாளும் அரசனுடைய பயிரிப்பட்சியானது பறந்து வந்து இவன் மார்பில் வந்திருக்க அதைப்பிடித்து விற்பனை செய்தாலுணவுக்காகுமென்று ஒரு வீதியில் விலைகூறி நிற்கையில்

அவ்வூரையாளும் தாபீதரசனுடைய காவற்காரர்கள் பயிரிப்பட்சியையும் அப்பாசையும் கட்டிப்பிடித்துக் கொண்டுபோய் தாபீதரசனிடத்தில் விட,

அவர் இவர் வரலாற்றையெல்லாம் கேட்டு அகமதுசாவையும் அவர் மனைவியையும் அழைத்து வந்து மூவர்களுக்கும் விருந்து முதலாகியதுமளித்துப் பிரியமாயிருக்கையில்,

அப்பாசு தாபீதரசனிடத்தில் ஆயிரம் பொன்னும் ஒரு குதிரையும் வாளும் வாங்கிக்கொண்டு அதற்கீடாகத் தாயும்தகப்பனையும் வைத்துவிட்டு அந்நகரத்தை விட்டு ஒரு சத்திரத்தில் தங்கியிருக்கையில் இந்தத் தாபீதரசன் தன்மனதிலொரு படத்தையெண்ணி ஒரு சேவகனிடத்தில் ஒருவோலையெழுதிக் கொடுத்து இதுபோல செய்யென்றனுப்ப அவனும் அப்பாசு மன்னன் தங்கியிருக்கிற மடம் போய்ச்சேர்ந்து ஒன்றுக்கொன்று விசாரித்துச் சோர்வு பார்த்து ஓலையின் பிரகாரமுடிக்கலாமென்றிருக்கையில் அகஸ்மாத்தாய் காற்றும் மழையும் வந்து சேவகனையும் அவன் பரியையும் அடித்துக் கொண்டு போய்விட அவன் சோளிப்பையும் ஓலைச்சுருளும் அப்பாசுகையிலகப்பட அதைப் பார்த்துப் பிரலாபித்துக் கிழித்து ஓர் கிணற்றில் போட்டுவிட்டு அதிசீக்கிரத்தில் சீனதேசத்தில் ஒரு கிழவி வீட்டிற்றங்கி அவ்வூரையாளும் பகுவீரராஜன் மகள் மிகர்பானென்பவள் சொல் மசலாவுக்குப் பொருள் சொல்லி அவளைத் தோற்கும்படி செய்து அவளையும் நிக்காஹ் என்னும் கல்யாணம் முடித்து தன் தாய்தகப்பனிருக்கும் பதிக்குப் போய்ச் சேர்ந்து அவர்களையும் கூட்டிக்கொண்டு மன்காலிரடி வீழ்ந்த பாலை நிலத்தில் புதிதாயொரு பட்டணமும் பள்ளியுமுண்டாக்கி அதுகளிற் குடியேற்றி நீர்வளமுண்டாகும்படி செய்து,

தன் தேசமாகிய அந்தமாநகரிற் போய் அகமதுசாவுக்கு இரண்டாவது பட்டமுங் கட்டித் தேசதேசத்தரசர்கள் முதலான குடிபடைகளும் அவர் ஆக்கியாபித்தபடி நடந்து கொண்டு வைபவமாக மங்களகரமாய் வாழ்ந்துண்டு சுகபோகமாயிருந்த கிஸ்ஸாவை,

இங்ஙனம் சிற்றறிவுடைய சிறியேனாகிய இராமநாதபுரம் இரவுண் ஷாப்புக்கடை ப.வெ. முகம்மதுஇபுறாகீம் சாகிபென்பவன் யாவர்களும் எளிதிற் படித்து ஆனந்த மகிழ்ச்சியடையும் படியாய் நாடகாலங்காரமாய்ச் செய்தேன். இதில் ஏதேனும் எழுத்துக்குற்றம் சொற்குற்றம்

பொருட்குற்றமிருப்பினும் அதுகளைத் திருத்தி அல்லாவுக்காக மனம் பொறுத்துக்கொள்வீர்களென் பதற்கையமிராது".

இக்கதைப் போக்கிலிருந்து நாடகாசிரியர் அக்கால நாடக இலக்கியப் பண்பினைப் பின்பற்றியிருப்பதைக் காணலாம். முதலில் இறைவணக்கம், அதனைத் தொடர்ந்து நாயகவாழ்த்து, அவையடக்கம், ஆக்கியோன் வரலாறு, கட்டியகாரன் வருதலும் அறிவித்தலும், அரசன் கொலுவுக்கு வருதல், தேசவிசாரணை எனும் படிமுறையில் அது செல்கிறது.

இறைவணக்கம் பின்வருமாறு அமைகிறது:

மருகம்மழந்தமானை மகிழ்ச்சியோடரசு செய்த
திருவளரகம்மதுசா கீபுவின் குமாரனான
பெருமையப்பாசு நாட கந்தனைப் பேசுதற்கு
கருவினுட் கருவாயுள்ள கர்த்தனைக் கருதுவே மே.

பந்தமாய்ச் சீனமாகும் பகுவீரவரசன்
சுந்தரமிகர் பானென்னுங் தோகை சொல் மசலாத்தன்னை
அந்தமாய் வென்ற நல்லப்பாசு நாடகத்தைப்பாட
எந்தனையாளும் வல்ல விறைவனுங் காப்புத்தானே!

அப்பாசுக்கும் மிகர்பானுக்குமிடையே நடைபெறும் வாதப்பிரதிவாதம் இந்நூலின் மிகச் சுவையான பகுதியாகும். மூன்று நாட்களாக நடைபெற்ற விவாதத்தில் மிகர்பானின் அனைத்துக் கேள்விகளுக்கும் அப்பாசு பதில் கூறுகிறான். பாடல்களாயமைந்த கேள்விகளதும் பதில்களதும் சிலவற்றின் சுருக்கம் வருமாறு:

| | | |
|---|---|---|
| மிகர்பான் | : | எப்ப வந்தீர் காண்? |
| அப்பாசு | : | என்றன் தாய் தந்தையர் ஈன்றிட வந்தேன். |
| மிகர்பான் | : | தாமிருப்பெங்கே? |
| அப்பாசு | : | உடுக்குந்துகின்மேல் நானிருப்பது. |
| மிகர்பான் | : | ஆர் மகன் சொல்வீர்? |
| அப்பாசு | : | ஆதம் மகன் நான். |
| மிகர்பான் | : | ஆர் வளர்த்தார் காண்? |
| அப்பாசு | : | அல்லாஹ் வளர்த்தான். |
| மிகர்பான் | : | புவியில் எல்லவர்க்குமடுத்திருக்கும்யிதுவே பகையாயிருக்குமிசைப்பாய். |

| | | |
|---|---|---|
| அப்பாசு | : | மவுத்து. |
| மிகர்பான் | : | மனிதரிற் கேள்வியில்லா வாழ்சுவர்க்கம் புகுவரார் சொல்வாய்? |
| அப்பாசு | : | ஐந்தொகுத்துந் தொழுபவர் தான். |

சீனா தேசத்தில் நடைபெற்ற அப்பாசு - மிகர்பான் திருமணத்திலும் பின்னர் அந்தமாநகரில் நடைபெற்ற அப்பாசின் பட்டாபிஷேகத்திலும் இலங்கையைச் சேர்ந்தோரும் கலந்து கொண்டதாகப் புலவர் வர்ணிக்கிறார். திருமணத்தில் வங்காள தேசத்தவரும் **சிங்கள நாட்டாரும்**; அதே போன்று பட்டாபிஷேகத்தில் வங்காளர், மராட்டியர், கலிங்கர், கர்நாடகர், **சிங்களர்,** கொங்கணர் என்போர் கலந்து கொண்டதாகவும் வர்ணிக்கிறார்,

பாடலாக அமைந்துள்ள நாடகம் எல்லோருக்கும் தெளிவாகப் புரியுமென்று எதிர்பார்க்கமுடியாது. இதனை இலகுபடுத்துவதற்காக நாடகச் சம்பவங்கள் இடைக்கிடை வசன நடையிலும் கூறப்பட்டுள்ளன. இதன் மூலம் மக்கள் கதைப் போக்கை விளங்கிக் கொள்வது இலகுவாகின்றது.

உதாரணத்திற்கு ஒரு பகுதி:

“ அகோதெப்படியென்றால், இவ்விதமாக அகமதுசா புத்திரனில்லாததால் ஏங்கிப் புலம்பி அமைச்சனோடு சொல்ல மந்திரி அமீரென்பவர் அரசனைப் பார்த்து தரும முதலிய சக்காத்துச் செய்தால் அல்லாகுத்த ஆலா புத்திரன் கொடுப்பானென்று சொல்ல, அதையரசன் கேட்டு இனி நடக்கிறவிதங்காண்க.”

## iv. லால் கௌஹர் நாடகம்

நாடகத் தலைவனாகிய லால் எனும் பெயரையும் தலைவியான கௌஹர் எனும் பெயரையும் இணைத்து உருவானதே இந்நாடகத்தின் பெயராகும். லைலாமஜ்னு, சலீம் அனாக்கலி, றோமியோ ஜூலியட் என்பன போன்ற கதையே இதுவாகும். ஆனால் அவை எல்லாம் துன்பியலாகமுடிய, இந்நாடகத்தில் லாலும் கௌஹறும் பல இன்னல்களுக்குட்பட்டு, இறுதியில் ஒன்றிணைகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாகூரைச் சேர்ந்த முகம்மது நயினா மரைக்காயர் என்பவரினால் இயற்றப்பட்ட இந்நாடகம், நாகூர் குலாம் காதிறு நாவலரால் பார்வையிடப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. அப்பிரதிக்கிணங்க 1901ஆம் ஆண்டு சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு மறுபதிப்புச் செய்தார். சமீபத்தில் 1990ஆம் ஆண்டு பேராசிரியர் கலாநிதி சே.மு.மு. முகமதலி மீண்டும் பிரசுரஞ் செய்துள்ளார்.

அக்கால நாடகத் தன்மைகள் யாவும் இந்நூலிலும் காணப்படுகின்றன. அத்தன்மைகளைப் பின்வருமாறு பொதுமைப்படுத்தலாம்: ஓர் இளவரசன் தலைவனாகவும் ஓர் இளவரசி தலைவியாகவும் இருப்பர். அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் மையல் கொள்வர். ஆயினும் ஒன்று சேர்வதற்குப் பல எதிர்ப்புக்கள் கிளம்பி, அதனாற் பல இன்னல்களை அனுபவிப்பர். நாடகத்திலே பல வீர, தீர சாகஸங்கள் இடம்பெறும். மந்திர தந்திரங்களும் ஒன்று சேர்ந்து இறுதியில் சுபமங்களகரமாக முடிவடையும்.

லால் கௌஹர் நாடகமும் அவ்வாறே அமைகிறது. வங்காள தேசத்தரசன் சம்ருதுஷா என்பவர். அவரது ஒரே மகனான லால் பட்டத்து இளவரசனாவான். எத்தகைய பிரச்சினையுமின்றி நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நிகீனா எனும் நாட்டில் ஜவாஹிறுஷா எனும் அரசன் ஆட்சி செய்து வந்தான். அவனது ஒரே மகள் கௌஹர் என்பவளாவாள். பேரழகி.

ஒரு நாள், தேவகன்னியர்கள் தன்நாட்டில் நித்திரையாயிருந்த லாலைக் கட்டிலோடு தூக்கிக்கொண்டு வந்து, தன் நாட்டிற் தூங்கிக் கொண்டிருந்த கௌஹர் அருகே வைத்து விட்டனர். இருவரும் விழித்தவுடன் ஆளையாள் பார்த்து அளவிலா அன்பு கொண்டு கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்களிடையே நெருக்கம் அதிகரிப்பதைக் கண்ட தேவகன்னியர், இருவரையும் மீண்டும் துயில் கொள்ளச் செய்து, லாலை அவனது நாட்டிற்குக் கொண்டு சென்று, அவனது வழமையான படுக்கையிடத்தில் விட்டுவிட்டனர்.

நித்திரை விட்டெழுந்த கௌஹர், தான் சந்தித்த லாலை நினைத்தே புலம்பினாள். தாய் தந்தையர் எவ்வளவு புத்தி சொல்லியும் அவளது புலம்பல் அடங்கவில்லை.

அரச மாளிகைத் தோட்டத்தில் தான் எதிர்கொண்ட பறவைகள் அனைத்திடமும் கூட, தனது லாலைக் கண்டீர்களோ என விசாரிக்கிறாள்.

இவளது நடத்தையைக் கண்டு ஆத்திரமடைந்த மன்னன் ஜவாஹிருஷா அவளை விலங்கிட்டு வீட்டுக்காவலில் வைத்தான்.

லாலின் நிலையும் இதுவேயாகும். துயில்கலைந்தெழும்பிய லால், கௌஹறை நினைத்தே சதா அலட்டிக் கொண்டான். தனது மகனுக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டதாகக் கருதிய சம்ருதுஷா வைத்தியரை அழைப்பித்தான். வைத்தியர் வருகையைப் புலவர் பின்வருமாறு வர்ணிக்கிறார்:

ஹக்கீமும் வந்தாரே யூனானி
ஹக்கீமும் வந்து தோன்றினாரே
திக்குத் திசைகளிலுள்ள புற்பூண்டெல்லாந்
தேடியெடுத்து மூட்டையாக்கிக்கொண்டு
பக்குவஞ் செய்வேனென்று யூனானிப்
பழைய ஹக்கீமும் வந்து தோன்றினாரே.

கல்லொடு காய் கிழங்கா மருந்துவகைக்
கஞ்சா வபினுங் கடைச்சரக்குகளும்
வல்லமையுடன் சேர்த்தே யூனானி
வைத்தியர் வந்து தோன்றினாரே.

காலக்கிரமத்தில் தனது மகனின் உண்மை நிலையைத் தந்தை அறிகிறார். கௌஹறைத் தேடிக்கண்டு பிடிக்கச் சம்மதிக்கிறார். ஆனால் தானே போய் அவளைத் தேடிக் கொண்டு வருவதாகக் கூறி, இளவரசனுக்கான உடைகளைக் களைந்து, பக்கீர் உடையணிந்து நாட்டைவிட்டுப் புறப்படுகிறான் லால்.

இரண்டு வருடங்களாகக் காடுகளிலும் நாடுகளிலும் கௌஹறைத் தேடியலைகிறான். அப்போது பல்வேறு இன்னல்களைச் சந்திக்கிறான். கௌஹர் பறவைகளிடம் இவனைப் பற்றி விசாரித்தது போன்று, லால் மிருகங்களிடம் விசாரிக்கிறான்.

கானகத்தில் வாழும்புள்ளிமான்களா - என்றன்
காதலி கௌஹறைக் கண்டேனென்று சொல்வீரா

*வானரக்குலங்களே யென்மாமயற்கிசைந்த - அந்த*
*வஞ்சியாள் கௌஹறரைக் கண்டேனென்று சொல்வீரா*
*பொங்கிய கிருகராஜசிங்கராசிகாள் - என்றன்*
*பூவையாள் கௌஹறரைக் கண்டேனென்று சொல்வீரா*
*துங்கமுறும் வேங்கைப் புலியின் குலங்களா - என்றன்*
*தோகையாள் கௌஹறரைக் கண்டேனென்று சொல்வீரா*
*மானிடர் கலங்கவரும் யானையின் குலமே - அந்த*
*மாது கௌஹறர் தன்னைக் கண்டேனென்று சொல்வீரா*
*சானுவிலுலாவிவருந் தேனுவின் குலமே - எந்தன்*
*தையல் கௌஹறர் தன்னைக் கண்டேனென்று சொல்வீரா*
*காரிருளையோட்டு பெருங் கரடியின் குலமே -அந்தக்*
*காரிகை கௌஹறரைக் கண்டேனென்று சொல்வீரா*
*பாரினிலுவக்கும் பசுவின் குழாங்களே - அந்தப்*
*பாவையாள் கௌஹறரைக் கண்டேனென்று சொல்வீரா.*

*கண்டஜெந்திடத்திலெல்லாம் விண்டுகேட்டேனே - கௌஹறர்*
*கன்னியைக் கண்டதா யொன்றுஞ் சொல்லவில்லையே*
*எண்டிசைக்கும் வல்ல பெரியோனேயென் செய்வேன் - அந்த*
*ஏந்திழையிடத்தில் நான் போய்ச் சேர்ந்திடற்கருள்வாய்.*

*இவ்வாறு அலைந்து திரிகின்ற வேளையிலே, ஹீராப்பரி என்பாளுடைய மாளிகைத் தோட்டத்துள் ஒரு நாள் பிரவேசித்த லால், களைப்பு மிகுதியினால் அங்குள்ள மரமொன்றின் கீழ்த் தூங்கிவிட்டான். ஆணழகனான லாலைக் கண்ட ஹீராப்பரி அவன் மேல் மையல் கொள்கிறாள். எனினும் லால் தனது முழு வரலாற்றையும் கூறி அவளோடு வாழ மறுக்கிறான். கோபங்கொண்ட அவள், லாலை மானுருவாக மாற்றிவிட்டாள்.*

*மானுருக்கொண்ட லால் ஒரு நாள் ஒரு மரத்தடியிற் படுத்திருக்கும்போது, அம்மரத்திலிருந்து இரு பறவைகள் பின்வருமாறு பேசிக்கொள்கின்றன: "இம்மரத்தின் வேரில் தலையைத் தேய்த்தால் பழைய உருவம் வரும்; இலையை மடியில் வைத்துக்கொண்டால் ஒருவனது உருவம் மற்றவர் கண்ணுக்குத் தெரியாது; மலரை மார்பில் வைத்துக் கொண்டால் நினைத்த இடத்துக்கு ஒரு நொடியில் சென்றுவிடலாம்; கிளையைக் கையில் வைத்துக்கொண்டால் நினைத்தவை யாவும்*

நடைபெறும்." இதனைச் செவியுற்ற லால் தனது தலையை வேரில் தேய்த்து மீண்டும் மனித உருவம் பெற்றான். மரத்தின் இலை, மலர், கிளையோடு பயணத்தைத் தொடர்ந்தான். அவற்றின் உதவியோடு கௌஹர் இருந்த இடத்தை அடைந்து அவளை விடுவிக்கிறான்.

இதனையறிந்த கௌஹரின் தந்தை ஜவாஹிருஷா லாலை எதிர்த்துப் போரிடத் தனது படையாட்களை அனுப்புகிறான். அவர்களை லால் தோற்கடிக்கிறான். இதன் விளைவாக கௌஹரை லாலுக்கு விவாகம் செய்து கொடுக்கச் சம்மதிக்கிறான்.

விவாகத்தின் பின்னர் லால் தனது துணைவியுடன் நாடு திரும்புகிறான். தந்தையும் மகிழ்ந்து, மகனுக்கு முடிசூட்டி மன்னனாக்குகிறார். எல்லாம் சுபமாக முடிகிறது. அதனைப் புலவர் பின்வருமாறு கூறுகிறார்:

அதிபதிசம்ருத்ஷா வுமனைவியும்லா
லரசொடுகௌஹருமவடன் றந்தைதாயு
நதிபதிங்காளவஹுஷாம் நிகினா
நகர்களைச் சேர்சிற்றிறைகளா தியாருஞ்
சுதிபதியிந்நாடகத்தைத் தொகுத்தோன்கேட்போர்
சுபஷெ முடனே படிப்போர் தொன்மைவாய்ந்த
நிதிபதியிவ்வுலகஜீவானமாக்கண்யாவு
நிறைந்தசம்பத்தோகிட நீடுழிவாழி.

அக்கால நாடக வழக்கு எவ்வாறிருந்தது என்பதை இந்நாடகத்திலும் காண்கின்றோம். ஆரம்பத்தில் காப்பு, அதனைத் தொடர்ந்து துதிகவி, ஆக்கியோன் பெயர், அவையடக்கம், மங்களம் என்பன கூறப்பட்ட பின்பே கதை தொடங்குகிறது. ஆக்கியோன் பெயரை நூலடக்கத்தினுட் சேர்ப்பதே அக்கால மரபு:

சேலேந்துங்கயத்துடவை செறிந்திலங்கு பங்காளதேயமுய்யக்
கோலேந்து லாலரசன் கௌஹரை சேர் காதையை நாடகமாகக்
கோத்து
மாலேந்தும் படியுரைத்தான் மதாறு சாகிபுதவத்து மைந்தன் சால
பாலேந்து திருநாகூர் வாழ் முகம்மது நயினா மரைக்கான்மாதோ.

என வருகிறது பாடல்.

இதனைப் போன்றுதான் கட்டியகாரனும் எல்லா நாடகங்களிலும் முக்கிய இடம் வகிக்கிறான். அவனைப் பின்வருமாறு வர்ணிக்கிறார் புலவர்:

கட்டியக்காரனும் வந்தான் சம்ருத் ஷாவாயில்
கட்டியக்காரனும் வந்தான்.

கட்டியக்காரனும் வந்தான் கனைத்துக்கனைத்தஹுஷாம்
பட்டினத்தையாள் சம்ருது பாத்துஷாவின் வாயில் காக்கும் -
கட்டியக்.....

மெய்யிற் சட்டையுமிலங்க மேல் தலைப்பாகைதுலங்கக்
கையில் வெள்ளித்தடியுடன் கண்டவரெல்லாங் கலங்க - கட்டியக்......

துட்டர்களெல்லாமடங்கத் துடுக்காமீசைமுறுக்கி
பட்டினத்தோர்க்கெச்சரிக்கப் பாத்துஷா சம் ருதுவாயில் - கட்டியக்.....

குற்றேவல் செய்வோர்களெல்லாங் குலைந்து நடுங்கிடவே
வெற்றி பாதுஷாக் கொலுவில் வீரவாளணிந்துகாக்க - கட்டியக்......

கிராமப்புற மக்களுக்கெனவே இந்நாடகம் இயற்றப்பட்ட காரணத்தினால், மக்களின் பேச்சுவழக்கு, பழமொழிகள், சனரஞ்சக உதாரணங்கள் நூல் முழுவதும் விரவி அழகூட்டுகின்றன.

மூலநூலுக்கு எட்டுப் புலவர்கள் சாற்று கவிகள் வழங்கியுள்ளனர். நாகூர் குலாம் காதிறு நாவலர், மு. செவத்த மரைக்காயர், க. பக்கீர் முகியத்தீன், செ. கு. குலாம் முகம்மது சாஹிபு மரைக்காயர், இராமசாமிச் செட்டியார், மீ. அல்லி மரைக்காயர், அ. முகம்மது சுல்தான் மரைக்காயர், மு.ஆ. முகியித்தீன் அப்துல் காதிறு என்போரே அவர்களாவர். இத்தகைய சாற்றுகவிகள் இதன் பெறுமதியைப் பன்மடங்கு உயர்த்துகின்றன.